**O.S.No. 174/2012**

**DW1 : சண்முகம்** தேதி 12.11.2025

**பிவாசா 1 சாட்சி சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு, வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

வாதி சுப்புலட்சுமிக்கு எத்தனை குழந்தைகள் என்றால் 2 மகன்கள். வெற்றிவேல், கார்த்திக். அவர்கள் இருவரும் இறந்துவிட்டார்கள். வெற்றிவேல் திருமணமாகி 6 மாதத்தில் இறந்து விட்டார் என்றால் பேச்சு வார்த்தை இல்லை என்பதால் அது எனக்கு தெரியாது. கார்த்திக் சாலை விபத்தில் இறந்து விட்டார். இறப்பு காரியத்திற்கு நான் போய் இருந்தேனா என்றால் அவர்கள் வீட்டிற்கு வெளியில் இருந்து பார்தது விட்டு வந்து விட்டேன். இறப்பு காரியத்ததில் கலந்து கொள்வில்லை. பவளத்தாம்பாளையம் சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்றால் கருப்பணகவுண்டர், அத்தப்பகவுண்டருக்கு பாத்தியப்பட்டது. கருப்பணகவுண்டர், அத்தப்பகவுண்டரிடம் இருந்து தான் என் அப்பாவும் என்னுடைய தாயாரும் கிரையம் வாங்கினார்கள் என்றால் கருப்பணகவுண்டரிடம் இருந்து தான் என் அப்பாவும் அம்மாவும் கிரையம் வாங்கினார்கள் என்று சொல்கிறேன். கருப்பணகவுண்டர் எனக்கு உறவினர் என்றால் சரிதான். கருப்பணகவுண்டர் என் தாத்தா முறையில் உறவினர். கருப்பணகவுண்டருக்கு 2 மனைவிகள். முதல் மனைவி இறந்த பிறகு 2 வது திருமணம் செய்து கொண்டார். முதல் மனைவி பெயர் ஞாபகத்தில் இல்லை. 2 வது மனைவி பெயர் சின்னம்மாள். கருப்பணகவுண்டருக்கும் நாச்சாயம்மாளுக்கும் இடையே ராமசாமி என்ற மகனும் அம்மணியம்மாள் என்ற மகளும் என்றால் சரிதான். ராமசாமியின் மகன் நாச்சிமுத்து மற்றும் பழனிசாமி என்றால் சரிதான். நாச்சிமுத்து மருமகள்கள் 2 பேர். கருப்பணகவுண்டருக்கும் என் தாயார் ராமாயம்மாளுக்கும் என்ன உறவு

முறை என்றால் மகள் உறவு முறை. கருப்பணகவுண்டர் என்னுடைய தாயார் மகள் உறவு முறை என்பதால் பணம் வாங்காமல் கிரையம் கொடுத்து விட்டார் என்றால் சரியல்ல. அப்போது நான் 6 மாத குழந்தை என்பதால் அது எனக்கு தெரியாது என்றும் தற்போது வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பவளத்தாம்பாளையம் சொத்து என் பெற்றோர் 1947 ல் கிரையம் வாங்கினார்கள். அதில் 4 ஏக்கர் 85 செண்ட். சர்வே எண். 33/1 சப்டிவிசன் தெரியாது. 4 ஏக்கர் 85 செண்ட்டில் 3 ½ செண்ட்டில் வீடும் 4 செண்ட்டில் கூரை வீடும் இருந்தது என்றால் சரிதான். அந்த சொத்து தற்போது யார் பெயரில் உள்ளது என்றால் செந்தில்குமார் பெயரிலும் எனது பெயரிலும் உள்ளது. அந்த உயில் எந்த வருடத்தில் எழுதப்பட்டது என்றால் வருடம் ஞாபகத்தில் இல்லை. அந்த உயில் படி தான் எனக்கு சொத்து பாத்தியம். அந்த உயிலில் எனக்கு எத்தனை ஏக்கர் என் தந்தை எழுதி வைத்தார் என்றால் என் அப்பா உயில் சாசனம் எழுதி வைக்கவில்லை தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்தார். அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் 4 ஏக்கர் 85 செண்ட்டில் பாதி எனக்கு எழுதி கொடுத்தார். மீதி பாதி செந்தில்குமாருக்கு எழுதி கொடுத்துவிட்டார். என் தந்தை உயில் எழுதி வைத்ததாக சொல்வது தவறு என்று சொன்னால் சரிதான். 17.6.1987 பிவாசாஆ 19 உயில் எழுதி வைக்கவில்லை என்றால் சரிதான். பிவாசாஆ 19 உயில் சாசனத்தை காட்டி சாட்சியம் கேட்ட போது சாட்சி அதை பார்த்து விட்டு என்னுடைய ஆவணம் தான் என்று கூறினார். என் அப்பா மற்றொரு உயில் எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அது பிவாசாஆ 20. சாட்சி பிவாசாஆ 20 ஐ படித்து பார்த்து விட்டு நாச்சிமுத்துகவுண்டர் எனக்கு எழுதி கொடுத்துள்ளார். ராமாயம்மாள் என் மகன் செந்தில்குமாருக்கு ஒரு உயில் எழுதி வைத்துள்ளார். மேற்படி 2 உயில்களின் படி தான் சொத்தை நாங்கள் அனுபவித்து வருகிறோம். சாட்சி தன்னிட்சையாக மேற்படி உயில் சாசனத்திற்கு பின்னிட்டு என் அம்மா செந்தில்குமாருக்கு ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரமும் என் தந்தை எனக்கு

ஒரு தானசெட்டில்மெண்ட் பத்திரமும் எழுதி கொடுத்தார்கள் என்று கூறினார். பிவாசாஆ 19 மற்றும் 20 உயில்களை ரத்து செய்யாமல் தான் தானசெட்டில்மெண்ட் பத்திரங்கள் எழுதி வைத்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. உயில் சாசனத்தை ரத்து செய்து விட்டு தான் தானசெட்டில்மெண்ட் கொடுத்துள்ளார்கள். ரத்து செய்த உயில் சாசனத்தை நான் தாக்கல் செய்யவில்லை என்றால் ஞாபகத்தில் இல்லை. 24.3.1992 ல் என் பெயரில் தானசெட்டில்மெண்ட் எழுதினார். 24.3.1992 ல் என் அப்பா தானசெட்டில்மெண்ட் எழுதி கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் எனக்கு 4 ஏக்கர் 85 சென்ட்டில் பாதி எழுதி கொடுத்துள்ளார். பிவாசாஆ 4 ல் பொதுவில் பாதி என்று தான் எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். என் தாயார் என் மகனுக்கு தானசெட்டில்மெண்ட் பத்திரம் பிவாசாஆ 5 4 ல் பொதுவில் பாதி என்று தான் எழுதி கொடுத்திருக்கிறார் என்றால் சரிதான். ஒரே தேதியில் 2 தானசெட்டில்மெண்ட் பத்திரம் எழுதப்பட்டது என்றால் சரிதான். பிவாசாஆ 4 மற்றும் பிவாசாஆ 5 தானசெட்டில்மெண்ட் பத்திரங்களை எழுத என் பெற்றோருக்கு உரிமை இல்லை என்றும் அதில் வாதி சுப்புலட்சுமிக்கு பங்கு உள்ளது என்று சொன்னால் சரியல்ல. ஆகவே பிவாசாஆ 4 மற்றும் பிவாசாஆ 5 ஆவணங்கள் வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. அதன் பின்னிட்டு வேறு எந்த தானசெட்டில்மெண்ட் ஆவணங்களும் என் தந்தை எழுதிவைக்கவில்லை என்றால் மீதி உள்ள சொத்தை முழுவதையும் என் மகனுக்கு என் தந்தை 2011 ல் ஒரு தானசெட்டில்மெண்ட் பிவாசாஆ 6 எழுதி வைத்துள்ளார். சுள்ளிகாடு மற்றும் திருவேங்கடம்பாளையம் சொத்தை என் தந்தை தானசெட்டில்மெண்ட் எழுதி வைக்க உரிமை இல்லை என்றும் அதில் வாதிக்கும் உரிமை உள்ளது என்று சொன்னால் சரியல்ல. கருமாண்டிசெல்லிபாளையத்தில் உள்ள சொத்து மானாவாரி பூமி. கருமாண்டிசெல்லிபாளையத்தில் உள்ள சொத்தில் (பிவாசாஆ 6 )

திருவேங்கடம்பாளையம்புதூர் கிராமத்தில் ச.எண். 512/1 மொத்தம் 10 மின் இணைப்புகள் உள்ளது என்றால் சரிதான். மேற்படி 10 மின் இணைப்புகள் மூலம் என் தந்தை விவசாயம் செய்து வந்தார் என்றால் சரியல்ல. ச. எண்.512/1 ல் 6000 சதுரடி வீடு உள்ளது என்றால் சரிதான். சின்ன சின்ன ஆஸ்பெட்டாஸ் போட்ட வீடுகள் உள்ளது. அதிலும் 10 மின் இணைப்புகள் பெற்று அந்த வீடுகளை வாடகைக்கு விட்டு உள்ளார் என்றால் சரிதான். அதில் வாடகை என் தந்தை வாங்கி வந்தார் என்றால் சரிதான். 512/1, 513/5 , 512/7 என் தந்தைக்கு சொத்து இருந்தது என்றால் சரிதான். அதிலும் 10 எச்.பி மோட்டார் உள்ளது என்றால் சரிதான். அதில போர்வெல் உள்ளது. அந்த போர் மூலம் விவசாயம் என் தந்தை செய்துள்ளார் என்றால் மேற்படி மோட்டார் பழுதடைந்து விட்டது. போரில் தண்ணீர் இல்லை. போர் மூலம் விவசாயம் செய்தார் என்று சொன்னால் சரியல்ல. பரையங்காட்டில் சொத்து உள்ளதா என்றால் உள்ளது. அதன் ச.எண்.440/1. மேற்படி சொத்தை 1922 ல் என் தாத்தா கிரையம் வாங்கினார். பரையங்காட்டில் மொத்த விஸ்தீரணம் என்றால் 1 ½ ஏக்கர். மேற்படி 1 ½ ஏக்கரில் என் தந்தை விவசாயம் செய்து வந்தார் என்றால் அது மானாவாரி பூமி. பள்ளகாட்டு தோட்டம் உள்ளது. அதில் 1 ஏக்கர் 33 சென்ட் உள்ளது. அது விவசாய பூமி. கருமாண்டிசெல்லிபாளையத்தில் உள்ள திருவேங்கடம்பாளையம் புதூரில் 350 சதுர மீட்டர். நத்தம் புறம்போக்கில் நாங்கள் அனுபவத்தில் இருந்ததில் என் அப்பாவிற்கு பட்டா கொடுத்தார்கள். மேற்படி பட்டா எதுவும் வழங்கவில்லை என்றும் அந்த சொத்தும் என் தாத்தா ராமணகவுண்டருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. அதன் விஸ்தீரணம் 3767 சதுரடி என்றால் சரிதான். அந்த இடத்தில் 1000 சதுரடியில் வீடு இருந்தது என்றால் சரிதான். அந்த வீட்டை வாடகைக்கு விடப்பட்டிருந்தது என்றால் சரியல்ல குடியிருந்தோம். தற்போதும் அந்த வீட்டில் தான் குடியிருக்கிறேன். மேற்படி சொத்துகள் அனைத்தும் என் அப்பாவிற்கு பாத்தியப்பட்டது அல்ல என்றும்

என் தாத்தா ராமணகவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் அதில் வாதி சுப்புலட்சுமிக்கு பாத்தியப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. பிவாசாஆ 6 ஆவணம் வாதியை எந்த விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என் தாயார் பவளத்தாம்பாளையத்தில் உள்ள சொத்தை மட்டும் தான் என் மகன் செந்தில்குமாருக்கு எழுதி வைத்தார். என் மகள் பெயர் மாலதிதேவி. மாலதிதேவிக்கு என் பெற்றோர் சொத்து எதுவும் எழுதி வைக்கவில்லை. நான் 12.12.1997 ல் என் மகளுக்கு 1 ஏக்கர் தானசெட்டில்மெண்ட் எழுதி வைத்திருக்கிறேன். மேற்படி பத்திரத்தில் பொதுவில் பாத்தியம் என்று எழுதியிருக்கிறேன் என்றால் சரிதான். (பிவாசாஆ 21). பிவாசாஆ 21 ஐ என் மகளுக்கு எழுதி வைக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. மேற்படி பிவாசாஆ 21 வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. எனக்கு என் அப்பா எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் மூலம் சொத்து பாத்தியப்பட்டதால் அதனை பொறுத்து என் மகளுக்கு தானசெட்டில்மெண்ட் மூலம் சொத்து கொடுத்திருக்கிறேன். அதில் வாதிக்கு உரிமையில்லை. பிவாசாஆ 21 செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிவாசாஆ 9 வரி ரசீதுகள் செந்தில்குமார் பெயரில் உள்ளது. பிவாசாஆ 9 வாதிக்கு தெரியாமல் வாங்கப்பட்டதால் அது வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. என்னிடம் காண்பிக்கப்படும் Voter ID என் தந்தையுடையது. பிவாசாஆ 13 கதிரம்பட்டி கிராம பஞ்சாயத்தில் வாங்கிய குடிநீர் இணைப்பு ரசீது என் அப்பா நாச்சிமுத்து கவுண்டர் பெயரில் உள்ளது. பிவாசாஆ 14 பேங்க் பாஸ்புக் என் தந்தைக்கு பாத்தியப்பட்டது. நான் வாதியின் மீது வேறு வழக்கு தனியாக தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சாட்சி தன்னிட்சையாக வாதியின் மீது வழக்கு தாக்கல் செய்திருப்பதாக அ.வ.எண் 260/2024 I ADM ல் தாக்கல் செய்துள்ளதாக கூறினார். அந்த வழக்கு நிலுவையில் உள்ளது. மேற்படி வழக்கில் யார் யார் தரப்பினர்கள் என்றால் என் தங்கை சுப்புலட்சுமி மற்றும் 9 பேர் என்றால்

சரிதான். மேற்படி வழக்கை எதற்காக தாக்கல் செய்தேன் என்றால் பாகப்பிரிவினை கோரி தாக்கல் செய்தேன். சுப்புலட்சுமி பெருந்துறை உரிமையியல் நீதிமன்றத்தில் அ.வ.எண்.118/24 என்ற வழக்கை தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரிதான். கருமாண்டிசெல்லிபாளையத்தில் உள்ள சொத்தை என் மகன் கிரையம் கொடுத்துவிட்டார் என்றால் சரிதான். அந்த கிரையம் செல்லாது என்று சுப்புலட்சுமி மேற்படி அ.வ.எண்.118/24 தாக்கல் செய்திருக்கிறார் என்றால் சரியல்ல. அ.வ.எண்.118/24 வழக்கு பொறுத்து எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் கருமாண்டிசெல்லிபாளையத்தில் 16.10.2024 ல் என் மகன் செந்தில்குமார் கிரையம் செய்து கொடுத்த பத்திரம் என்றால் அது எனக்கு தெரியாது. 19.5.2025 ல் செந்தில்குமாரிடம் கிரையம் பெற்றவர்கள் வாதியிடம் பாக பாத்திய விடுதலை பாத்தியம் எழுதி வாங்கி கொண்டார்கள் என்றால் தெரியாது. தாவா சொத்துகள் அனைத்திலும் வாதிக்கு பாதி பங்கு உள்ளது என்றும் மேற்படி சொத்துகளின் பேரில் ஏற்பட்ட பத்திரங்கள் எதுவும் வாதியை கட்டுப்படுத்தாது என்றும் வாதி கோரியபடி தீர்ப்பாக வேண்டும் என்று சொன்னால் சரியல்ல. பிரமாண வாக்குமூலத்தில் நான் சொல்லியிருக்கும் சங்கதிகள் பொய்யானவை என்றால் சரியல்ல. அவை வாதியை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் வாதியின் திருமணத்தின் போது 50 புவன் நகையும் ரூ.5000 பெட்டி பணமும் என் பெற்றோர் கொடுத்தாக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் தங்கையை உறவினருக்கே திருமணம் செய்து கொடுத்ததால் அவருக்கு சீர் வரிசை செய்து கொடுக்கவில்லை என்றால் சரியல்ல.